
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கடலூர் மாவட்டம்

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியம், பாதிரிக்குப்பம் ஊராட்சி (மு) கிராமம், சர்வே எண்.57/3 -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் அமைப்பு வரைபடம்.

(அங்கீகரிக்கப்பட்ட பாதிரிக்குப்பம் விரிவு அபிவிருத்தி திட்டம் -2)

(திட்டப்பகுதி - **PLANNING AREA**)



இணையதள விண்ணப்ப எண் :LB40796H/TCP/CUD	வ
அளவு திட்டம் : 1:600	
மனைப்பிரிவு இடத்தின் எல்லை -	கோரிய மொத்த மனைகள் - 17 மனைகள்
நிலையிலுள்ள சாலை -	ஒதுக்கிய மனைகள் - 17 மனைகள்
மனைப்பிரிவு உத்தேச சாலை -	

பரப்பளவு விபரம்:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு - 4400.00 ச.மீ (1.08 ¼ ஏக்கர்)

சாலையின் பரப்பளவு மூலைமுடக்கு உட்பட - 1225.74 ச.மீ (0.30¼ ஏக்கர்)

மனையிடங்களின் மொத்தப்பரப்பளவு - 3174.26 ச.மீ (0.78½ ஏக்கர்)

பொது ஒதுக்கீடுகள்: (உள்ளாட்சிக்கு தானமாக ஆவண எண் - 448/2026, நாள்-30.01.2026 -ன் வாயிலாக ஒப்படைப்பு செய்யப்பட்டது)

(பூங்கா- நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ROC No-4367/2019/BA-2 நாள்:05.02.2020-இன் படி பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய பரப்பளவிற்கு நிகரான வழிகாட்டு மதிப்பீட்டு தொகையினை மனுதாரர் செலுத்திவிட்டார்)

உள்ளாட்சி உபயோக மனை (A) - 17.22 சமீ (0.54%) -

மின்வாரிய உபயோக மனை (B) - 18.01 சமீ (0.57%) -

மூலை முடக்கு:

7.2மீ க்கு மேல் 12.0மீ வரை - 1.50மீ x 1.50 மீ விடப்பட வேண்டும்

12.0மீ க்கு மேல் 30.50மீ வரை - 4.50மீ x 4.50 மீ விடப்பட வேண்டும்

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்: 18 நகராட்சி நிர்வாகம் (மு) குடிநீர் வழங்கல் துறை (ஆ.மு-1) நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண்: 16 நகராட்சி நிர்வாகம் (மு) குடிநீர் வழங்கல் துறை நாள். 31.01.2020 -ன் படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் LOCAL BODY ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கும் மற்றும் TANGEDCO ஒதுக்கீட்டினை TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கும் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. அரசாணை எண்: 181 வீட்டுவசதி (மு) நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 09.12.2020 -ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையை தார் சாலை வசதி, மழை நீர்வடிகால் வசதி, மேல்நிலை தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதி மனுதாரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதிசெய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (மு) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் (அ) மனைஉட்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைகுண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை மாற்றம் எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 1.2மீ×0.6மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி - திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பு:
அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிக்கப்பட்டுள்ளது.

SWP/DTCP(CUD)NO: 71 /2026

இணையதள ஒப்புதல்
இ.சைன் செய்யப்பட்டது

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கடலூர் மாவட்டம்

Signature valid
Signed by: Assistant Director
Location:Cuddalore
Date:2026.04.21 16:03:19

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Cuddalore
Date:2026.04.01 14:42:01

அளவர்/உதவி வரைவாளர்

வரைவாளர் நிலை - III

பார்வையாளர்

ர் உள்ளூர் திட்டக்குழும திட்ட அனுமதி எண் -14/2026